ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2373/42 - 2024 මාර්තු මස 01 වැනි සිකුරාදා - 2024.03.01

*2373/42 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்***

5 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் பிரிவு 5 இன் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், எந்தவொரு வெளிநாட்டு அரசாங்கங்கள், வர்த்தக நிறுவனங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் உள்ளிட்ட அமைப்புகள் மற்றும் நலன்விரும்பிகளிடமிருந்து அந்நியச் செலாவணியாக அல்லது நன்கொடை அல்லது அன்பளிப்பு என்ற அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின் பேரில் 2023, நவெம்பர் 30 ஆந் திகதிய 2360/52 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை மூலம் 0804.10.10 மற்றும் 0804.10.20 இயைபு முறைக் குறியீட்டின் கீழ் வகைப்படுத்தப்பட்ட பேரீச்சப் பழங்களை இறக்குமதி செய்யும் போது கிலோவுக்கு 200 ரூபா என விதிக்கப்பட்ட விசேட வியாபாரப் பண்ட அறவீட்டிலிருந்து கிலோவிற்கு 1 ரூபாவினை அறவிட்டதன் பின்னரான மீதித் தொகையினை தள்ளுபடி செய்வதற்கு இந்தக் கட்டளையினை ஆக்குகிறேன்.*

*இக்கட்டளையானது, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் பிரிவு 2 இன் உப பிரிவு (3) இன் ஏற்பாடுகளுக்குட்பட்டு 2024, மாச்சு 02 ஆந் திகதி முதல் 2024, ஏப்பிறல் 11 ஆந் திகதி வரை செல்லுபடியாகும்.*

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு,
*2024, மாச்சு 01.*

EOG 03-0016

1A - PG 6662 — 429 (2024/03) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*